ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2496/ 24 - 2026 ජූලි මස 08 වැනි බදාදා - 2026.07.08
2496/24 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடு களின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில் மஹா பலாத்த கோறளை சிறு பிரிவில், மாதாதில்ல (67 ஜே) கிராம அலுவலர் பிரிவில் உள்ள, கொந்தஹெல் என அழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 21.07.2015 ஆம் திகதிய முதற் சுவட்டு இல. ப/பண்டா/2014/809 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு பின்வரும் எல்லைகளினாலும் விஸ்தீரணங்களினாலும் விபரிக்கப்பட்டுள்ளது :

**01. துண்டு “A” - கல்கொட உஹனே எல்பிட்டிய வத்தை - விஸ்தீரணம்: 0.0157 ஹெக்டயார்**

வடக்கு:மாதாதில்ல ஓயா மற்றும் வெரகொட மாசாச்சி சுனில் உரிமை கோரும் கல்கொட உஹனே எல்பிட்டவத்தை; கிழக்கு:வெரகொட மாசாச்சி சுனில் உரிமை கோரும் கல்கொட உஹனே எல்பிட்டவத்தை மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை);தெற்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் வெரகொட மாசாச்சி சுனில் உரிமை கோரும் கல்கொட உஹனே எல்பிட்டவத்தை;மேற்கு: வெரகொட மாசாச்சி சுனில் உரிமை கோரும் கல்கொட உஹனே எல்பிட்டவத்தை மற்றும் மாதாதில்ல ஓயா.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/5/2013/எச்டபிள்யூ/486.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 11.

EOG 07 - 0120